**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2022**

---

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலுள்ள 06 வீதிப் பிரிவுகளின் 131.50 கிலோமீற்றரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 81.75 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 60 மில்லியன் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டிருந்தது. ரூபா 2,828 மில்லியன் மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஆகஸ்ட் 05 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்திசெய்தல் திகதி 2022 ஏப்ரல் 09 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா. மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 4/3 ஆம் இலக்க பாலத்தை அகலமாக்குதல் 2021 ஒக்தோபரில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் குறித்த பாலத்தின் கிரயம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையில் இருந்து பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக சிவில் வேலைகள் நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 251.09 | 4/3 ஆம் இலக்க பாலத்திற்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி 2022.08.10 ஆக இருந்ததுடன் 2023.03.13 இல் நிறுத்திவைத்தல் பணம் விடுவிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தின் நடைமுறைவேலை மீதியை சிவில் வேலைகளுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட வீதிக் கிரயம் நிதக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 5 இன் 43(அ) பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதி நிலைமைக் கூற்றிற்குமான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியின் இறுதி அந்நிய செலாவணி விகிதத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும். எனினும், செயற்திட்டத்தின் வெளிநாட்டுக் கடனுடன் தொடர்புடைய நாணயமாற்று சமநிலை சீராக்கங்கள் நியமத் தேவைப்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - | செயற்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் இருந்து கடனிலிருந்தான பணவளிப்புக்கள் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கையின் அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வந்தது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நாங்கள் உண்மையான பணவளிப்புக்களை பதிவு செய்துள்ளோம், எனவே 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாணயமாற்று விகிதத்தை நாங்கள் கருத்தில் கொண்டிருக்கவில்லை. எனினும், தேவையான அறிவுறுத்தல்களுக்காக இந்த விடயம் பொது திறைசேரிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை கடைபிடித்தல். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் கடனுக்காக செலுத்தப்பட்ட திரண்ட வட்டி செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் வெளிநாட்டுக் கடன் மீதி மற்றும் நடைமுறை வேலை என்பன அந்தத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | 83.62 | அந்த வட்டியை பதிவு செய்யும் தேவைப்பாடு காணப்படாததுடன் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட வாக்குப்பணத்தின் கீழ் அத்தகைய வட்டி பதிவு செய்யப்படுகிறது. அதனால்தான், செயற்திட்டமானது ஆரம்ப நிலையிலிருந்து கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டியை நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்திருக்கவில்லை. | செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொதுத்துறை - கணக்கீட்டு நியமம் - 04 இன் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் ஆகியவற்றுக்கு நேரடியாக பங்களிக்கக்கூடிய கடன்பெறல் கிரயம், அந்த சொத்துக்களின் கிரயத்தின் ஒரு பகுதியாக மூலதனமாக்கப்பட வேண்டும். எனினும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு RDA நிதி வசதியுடன் தொடர்புடைய கடன்பெறல் கிரயத்தை செயற்திட்டம் மூலதனமாக்கியிருக்கவில்லை. | செயற்திட்ட கிரயத்திற்கு நிதியளிப்பதற்காக உள்ளூர் வங்கிகளில் இருந்து RDA அவ்வப்போது காலக் கடன்களைப் பெற்றுள்ளது. கடன் சேமிப்புக்களுடன் தொடர்புடைய அனைத்து காசுப்பாய்ச்சல்களும் RDA புத்தகங்களில் உள்ளதுடன் செயற்திட்டம் எந்த ஈடுபாட்டையும் கொண்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களை கடைபிடித்தல். |

**2.2 இணக்கம் செய்யப்படாத மீதிகள்**

| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் பெறுமதி ரூபா. மில்லியன் | தொடர்புடைய ஏட்டின் விபரம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 112.57 | 48.5 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏடுகளின் பிரகாரம் கடன் பெறுவனவுகளிலிருந்தான மொத்தச் செலவினம். | ERD அறிக்கையின் கணக்கிணக்கக் கூற்று மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிக்கை என்பன நிதிக்கூற்றுக்களில் இணைக்கப்பட்டுள்ளன. | வேறுபாடு ஆவணச் சான்றுகளுடன் இணக்கம் செய்யப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை<br><br>9.3 ஆம் பிரிவு | குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை செயற்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் செயற்திட்டம் ஒரு கூட்டத்தை மாத்திரமே நடாத்தியிருந்தது. | கொவிட்-19 காரணமாக, சுகாதார அமைச்சால் ஒன்றுகூடுவது தடைசெய்யப்பட்டது, அனைத்து அமைச்சுக்களும் சுகாதார வழிகாட்டல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டியிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3. **பௌதீக செயலாற்றல்**

3.1 **செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

**(அ) ஒருகொடவத்தை – அம்பத்தளையில் 6/2 ஆம் இலக்க பாலத்தை அகலப்படுத்துதல்**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | தாமதம்/ விடயம் கணக்காய்வு | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| சிவில் நிர்மாணம் | ஒருகொடவத்தை – அம்பத்தளையில் 6/2 ஆம் இலக்க பாலத்தை அகலப்படுத்துதல் | 100 | 82 | நிர்மாணப் பணிகள் 2020 சனவரி 17 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2021 ஏப்ரல் 13 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், ஆரம்ப ஒப்பந்தம் பூர்த்திசெய்தல் திகதியிலிருந்து 08 மாதங்களுக்கும் மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டம் 82 சதவீத பௌதீக முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்துள்ளது. முதலாவது கால நீடிப்பு (EOT) 2022 ஆகஸ்ட் 15 இல் காலாவதியான போதிலும், மேலும் நீடிப்பு எதிர்காலத்திற்கு அங்கீகரிக்கப்பட்டிருக்காதமையும் ஒப்பந்தத்தின் பொது நிபந்தனைகளின் 8.7 மற்றும் 14.15 (ஆ) பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடம் இருந்து தாமத சேதங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமையும் அவதானிக்கப்பட்டது. | தவிர்க்க முடியாத காரணத்தால் நீர் சபை குழாய்கள் பதிக்கும் பணி இடம்பெற்றது. |

**முகாமைத்துவத்தின் பதில்** GCC இன் 8.3 ஆம் உட்பிரிவின் பிரகாரம் நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தைத் திருத்தம் செய்வதற்கும், அதன் பிரகாரம் EOT ஐ கோருவதற்கும் ஒப்பந்ததாரருக்கு உரிமை உண்டு. 2023.07.06 இல் தலைவர், RDA ஆல் EOT-1 அங்கீகரிக்கப்பட்டதுடன் EOT-2 2023.08.29 இல் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

(ஆ) காணி சுவீகரிப்பு

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் காணித் துண்டுகள் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் காணித் துண்டுகள் | தாமதம்/ கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| காணி சுவீகரிப்பு | காணி சுவீகரிப்பு சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்தல். | 238 | இல்லை | செயற்திட்டத்தின் காணி சுவீகரிப்பு செயன்முறை 2012 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அது பூர்த்தி செய்யப்படவில்லை. 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 238 காணித்துண்டுகளுக்கு இழப்பீடாக ரூபா 153.7 மில்லியன் தொகையும் 82 காணித்துண்டுகளுக்கு தாமத வட்டியாக ரூபா 17.57 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காணித்துண்டுகள் தொடர்பான விபரங்களை செயற்திட்டம் சமர்ப்பிக்கத் தவறியிருந்தது. | வினைத்திறனற்ற செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் வார மேற்பார்வை. |

**முகாமைத்துவத்தின் பதில்** இது சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. எனினும், 2022 திசெம்பர் 31 வரை 44 ஆம் பிரிவின் கீழ் பதிவுசெய்யப்படவில்லை. மேலும் 2023 செப்தெம்பர் 30 வரை 34 பதிவுகள் காணப்படுகின்றன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 6/1 ஆம் இலக்க பாலத்தின் அகலப்படுத்தும் நிர்மாணப் பணிகள் 2019 ஒக்தோபர் 07 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 02 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. 2022 மார்ச் 03 இல் வழங்கப்பட்ட | ஒப்பந்தத்திற்கான பொறியியலாளர், ஒப்பந்ததாரர் மற்றும் அமைச்சுடன் கலந்துரையாடலொன்றை நடாத்திய பின்னர், பாலத்தில் போக்குவரத்தை அனுமதித்த பின்னர் பாலத்தை கையேற்பதற்கு முடிவு | மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைப்புச் சான்றிதழின் பிரகாரம் மேற்படி பாலம் 2021 திசெம்பர் 15 இல் பூர்த்தி செய்யப்பட்டதென குறிப்பிடப்பட்ட போதிலும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் 10.1 ஆம் உட்பிரிவுக்கு முரணாக பாலத்தை ஒப்படைக்கும் போது, அனைத்து மேற்பரப்பிடும் பணிகள், ஒன்றோடொன்று இணைந்தவை மற்றும் நடைபாதை, பாலத்தின் நடைபாதையில் சரிவுகளை அமைத்தல், தெரு விளக்குகள் போன்ற முக்கிய நிலுவைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்படி மிகுதிப் பணிகளின் பூர்த்திசெய்தல் விபரங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை. | செய்யப்பட்டது. கையேற்பு சான்றிதழில் நிலுவையாக உள்ள பணிகள் பட்டியலில் மிகுதிப் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த இடத்தில் நீர் சபை பணிகள் பூர்த்தியடைந்தவுடன் அதனை பூர்த்திசெய்யுமாறு கோரப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஒருகொடவத்தை - அம்பத்தளை வீதியில் 4/3 ஆம் இலக்க பாலத்தின் அகலப்படுத்தும் நிர்மாணப் பணிகள் 2019 ஒக்தோபர் 03 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2021 சனவரி 02 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. ஒப்படைப்பு சான்றிதழின் பிரகாரம் 2021 ஒக்தோபர் 26 இல் பாலம் பூர்த்திசெய்யப்பட்டதென குறிப்பிடப்பட்ட போதிலும் ஒப்பந்த பொது நிபந்தனைகளின் 10.1 ஆம் உட்பிரிவுக்கு முரணாக பாலத்தை ஒப்படைக்கும் போது அனைத்து தீந்தை பூசுதல் வேலைகள், கபியன் சுவர் நிர்மாணம், பாலத்தின் பின்புற சுவரை சுத்தம் செய்தல் மற்றும் அரைத்தல் திருத்தம் மற்றும் நடைபாதை நிர்மாணப் பணிகள் போன்ற முக்கிய நிலுவை பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், மேற்படி மிகுதிப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறவில்லை. | நீர் சபை கிடங்கு தோண்டுதல் மற்றும் புதிய குழாய் வரிசைகள் இடுதல் என்பவற்றுடன் தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக, மேலதிக கிரயத்துடன் அந்த மேலதிக பணிகளுக்கு ஒப்பந்ததாரர் EOT இற்கு உரித்துள்ள நிர்மாணப் பணிகளை பாதிக்கலாம். கையேற்பு சான்றிதழில் நிலுவையாக உள்ள பணிகள் பட்டியலில் மிகுதிப் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அந்த இடத்தில் நீர் சபை பணிகள் பூர்த்தியடைந்தவுடன் அதனை பூர்த்திசெய்யுமாறு கோரப்பட்டுள்ளது. | மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 குறைப்பயன்பாடுடைய வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒன்பது ஆண்டுகள் கடந்த பின்னர் ரூபா 10,628.0 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,605.72 மில்லியனை மாத்திரமே செயற்திட்டம் பயன்படுத்தியிருந்தது. எனவே, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,022.28 மில்லியனுக்கு சமமான 19 சதவீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2022.12.31 இல் உள்ளவாறான கடனின் மிகுதித் தொகை ரூபா 660.00 மில்லியனாக இருந்ததுடன் அத்தகைய கடன் சேமிப்பைப் பயன்படுத்தி ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் 4/1 ஆம் இலக்க பாலத்தை புனரமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டது. | செயற்திட்ட காலப்பகுதியின் போது நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டுக்கான பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு ரூபா 192.82 மில்லியனாக இருந்ததுடன் அதில், செயற்திட்டமானது மீளாய்வாண்டில் ரூபா 117.06 மில்லியனை மாத்திரம பயன்படுத்தியுள்ளது. மோசமான செயலாற்றல் மற்றும் நிர்மாணங்களின் தாமதம் என்பன அந்த சூழ்நிலையில் முக்கியமாக பாதிக்கப்பட்டுள்ளன. | GOSL கூறிற்குப் போதியளவு கட்டுநிதி கிடைக்காததால் ரூபா 4.9 மில்லியனை மாத்திரமே பயன்படுத்த முடிந்தது. | செயற்திட்ட காலப்பகுதியின் போது நிதியைப் பயன்படுத்துவதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஒருகொடத்த - அம்பத்தளை வீதியில் 4/3, 6/1 மற்றும் 6/2 பாலங்களின் புனரமைப்பு முறையே 2021 சனவரி 02 மற்றும் 2021 ஏப்ரல் 13 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், மூன்று பாலங்களையும் முழுமையாக பூர்த்தி செய்வதற்கு உண்மையான பூர்த்திசெய்தல் திகதி 2023 யூன் 06 வரை நீடிக்கப்பட்டது. இதனால், நிர்மாணப் பணிகளின் நீடிக்கப்பட்ட காலம் முடியும் வரை செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவைப் பராமரிப்பதன் காரணமாக, நிர்மாணப் பணிகளில் தாமதம் நேரடியாக செயற்திட்டக் கிரயத்தை அதிகரிப்பதில் நேரடியாக பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. எனவே, PMU ஐ பராமரிப்பதற்காக மீளாய்வாண்டில் செயற்திட்டமானது ரூபா 0.93 மில்லியன் தொகையை சிக்கமற்ற முறையில் செலவிட வேண்டியிருந்தது. | நீர் சபையின் புதிய குழாய் வரிசைகள் இடும் பணிகள் முடிவடையும் வரை, நிலுவையாக உள்ள முக்கிய பணிகளில் கலந்து கொள்ள முடியவில்லை. | மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஏப்ரல் 09 இல் தொடங்கப்பட்ட நீடிக்கப்பட்ட கடன் செல்லுபடியாகும் காலப்பகுதிக்கான அமைச்சரவையின் அங்கீகாரம் தொடர்பாக கணக்காய்விற்கு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கடன் செல்லுபடியாகும் காலப்பகுதி 2023.12.31 வரை அபிவிருத்திக்கான சவூதி நிதியத்தால் நீடிக்கப்பட்டது. | கடன் நீடிப்புக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**3.5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை மற்றும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றின் பிரகாரம் ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் 4/3, 6/2 மற்றும் 6/1 ஆம் இலக்க பாலங்களின் அகலப்படுத்தும் நிர்மாணப் பணிகளை தொடங்கும் மற்றும் பூர்த்தி செய்யும் திகதியில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. | இது ஒரு தவறாகும். மேலும் புள்ளிவிபரங்கள் சீர்செய்யப்பட்டது. | சரியான ஆவணச் சான்றுகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நானாவித வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களில் பொதுவான செலவினங்களை (வாகன சார்ஜர்கள், வாடகை, தண்ணீர் விலைப்பட்டியல், சுத்தம் செய்யும் செலவினங்கள்) பிரிப்பதற்கு சரியான மற்றும் நம்பகமான முறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு மாதமும் கட்டுநிதி மற்றும் ஒதுக்கீட்டின் கிடைக்கும் தன்மை மற்றும் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கான மொத்த செயற்திட்டக் கிரயத்தை பொறுத்துத் தொகை அறவிடப்படுகிறது. | பொதுவான செலவினங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கு பொருத்தமான கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டக் கிரயத்தை குறைப்பதற்காக ஒப்படைப்புச் சான்றிதழ் திகதியில் நிலுவையாக உள்ள பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள பணிகளை பூர்த்தி செய்தல் முக்கியமாக நீர் சபைப் பணிகளைச் சார்ந்தது. எனினும், அவை தவிர ஏனைய அனைத்து நிலுவைப் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டன. | மேலதிக கிரயமின்றி குறித்துரைக்கப்பட்ட செயற்திட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |